# 21. பாலன் இயேசு பிறந்தார்



பெத்லெகேமில்
மாட்டுத் தொழுவத்தில்
பாலன் இயேசு பிறந்தார்.

## 1. சின்னப் பாலர்

சின்னப் பாலர் நாமும்
தினமும் கோயில் செல்வோம்
இயேசுவைப் போல் வாழ
என்றுமே கல்வி கற்போம்

நல்லவை தீயவை அறிந்து
நாளும் பொழுதும் செபித்து
இயேசு காட்டிய வழியில்
நடந்து செல்வோம்

## 2. இயேசுநாதருக்கு ஸ்தோத்திரம்

இயேசு நாதருக்கே ஸ்தோத்திரம்
இன்று சிறுவர் நாம் சொல்வோம்
இயேசு நாதருக்கே ஸ்தோத்திரம்
இன்பமாய் அவரிடம் செல்வோம்

சின்னஞ் சிறுவரைக் காத்தருளும்
செல்வத் தந்தையாய்ப் பார்த்தருளும்
சின்னஞ் சிறுவரைக் காத்தருளும்
சிநேகம் நிறைந்திடும் இருதயமே.

தந்தை நமக்கவர் ஆமென்போம்
சொல்லிச் சொல்லித் துதிப்போம்
தந்தை நமக்கவர் ஆமென்போம்
சூழ்ந்து அவர் பாதம் தொழுவோம்

## 3. அம்மா அம்மா

அம்மா அம்மா ஆதரி என்னை
அம்மா அம்மா ஆதரி என்னை

தாயே தயவோடு பாரம்மா
சேயாய் அடியேனைச் சேரம்மா

வந்தேன் உன்சரணம் தேடியே
என்தாய் நீ எனவே ஓடியே

வானோர் புகழ்ந்திடும் அன்னையே
ஏனோ மறப்பது என்னையே.

## 4. அம்மா என்று அழைத்தால்

அம்மா என்று அழைத்தால்
குழந்தாய் என்று வருவாய்
அபயம் என்று சொன்னால்
அன்பாய் தூக்கி நெஞ்சில் வைத்து
என்னைக் காத்துக் கொள்வாய்

i

வேடிக்கை உலகம் பின்னால்
நான் சென்றேன்.
வேண்டியதெல்லாம் தருமென்று
நான் சென்றேன்
மீளாத்துன்பம் நானடைந்தேன்
அம்மா உனையழைத்தேன்

## 5. தேவ பாலனையும் தாயையும்

தேவ பாலனையும் தாயையும்
ஆதரித்த
அன்பு நிறை சூசையப்பரே
பாவிகளாயிருக்கிற எங்களுக்காக
மன்றாடும்.

6. அன்பே கடவுள்

அன்பே கடவுளென்றால்
அன்புக்கு ஈடேது சொல்
அன்பே இன்பமென்றால்
அன்புக்கு விலையேது சொல்

மண்ணோர்கள் மொழி பேசினும்
அன்புக்கு ஈடாகுமா...............
விண்ணோர்கள் மொழி பேசினும்
அன்புக்கு ஈடாகுமா................

7. சின்னஞ் சிறு பாலன்

சின்னஞ் சிறு இயேசு பாலா
அன்னை மரி இயேசு பாலா
பாடியாட என்னுடனே
ஓடி வாரும் தேவ பாலா (2)

கோயிலுக்கு நானும் வருகிறேன்
ஆசையுடனே நானும் வருகிறேன்
மன்னன் இயேசு உந்தனுக்கே
மாலை சூடவே நானும் வருகிறேன் (2)

ii

மல்லிகைப்பூ கொண்டு வந்தேன்
ரோஜா மலரும் கொண்டு வந்தேன்
மன்னன் இயேசு உந்தனுக்கே
மாலை சூடவே நானும் வருகிறேன் (2)

# செபம்

## ஆரம்ப செபம்

பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே ஆமென்.

## மங்கள வார்த்தைச் செபம்

அருள் நிறைந்த மரியாயே வாழ்க! கர்த்தர் உம்முடனே. பெண்களுக்குள்ளே ஆசீர்வதிக்கப் பட்டவள் நீரே. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

அர்ச்சிஷ்ட மரியாயே! சர்வேசுரனுடைய மாதாவே! பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும் ஆமென்.

## பரலோக மந்திரம்

பரலோகத்திலிருக்கின்ற எங்கள் பிதாவே! உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருக. உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக.

எங்கள் அனுதின உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும். எங்களுக்குத் தீமை செய்பவர்களை நாங்கள் பொறுப்பது போல எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் எங்களைச் சோதனையிலே விழவிடாதேயும் தீமையிலே நின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும் ஆமென்.